ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1839/14 - 2013 දෙසැම්බර් මස 04 වැනි බදාදා - 2013.12.04

*1839/14 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம்*

6 ஆம் பிரிவின் கீழான சான்றிதழ்

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர், விமல் வீரவங்ஸ ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின்படி இங்கே கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இந்தச் சட்டத்தின் 4 ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள எண்ணத்துக்கு அமைவாக வீடமைப்பு நோக்கத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசினால் சுவீகரிக்கப்பட வேண்டும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

விமல் வீரவங்ஸ,
நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
2013, நவெம்பர் 22.

**அட்டவணை I**

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்ல பிரதேச சபைப் பிரிவில், ஊராபொல கிராம உத்தியோகத்தர் பிரிவில், அமைந்துள்ள நுககஹவத்த என்ற காணியின் பின்வரும் எல்லைகளைக் கொண்ட அண்ணளவாக (35 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு) பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது :-

வடக்கு : நுககஹவத்த அல்லது பெலவத்த மற்றும் பாதை ;
கிழக்கு : நுககஹவத்த அல்லது பெலவத்த ;
தெற்கு : நுககஹவத்த அல்லது பெலவத்த ;
மேற்கு : பாதை.

**அட்டவணை II**

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்ல பிரதேச சபைப் பிரிவில், ஊராபொல கிராம உத்தியோகத்தர் பிரிவில், அமைந்துள்ள நுககஹவத்த என்ற காணியின் பின்வரும் எல்லைகளைக் கொண்ட அண்ணளவாக (2 றூ. 25 பே. விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு) பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது :-

வடக்கு : எச்.வனிக சுந்தர் என்பவருடைய வயல் ;
P.P.Co. 1963 காணித்துண்டு இலக்கம் 1 ;
கிழக்கு : P.P.Co. 4228 காணித்துண்டு இலக்கம் 2 ;
தெற்கு : P.P.Co. 4228 காணித்துண்டு இலக்கம் 2 ;
மேற்கு : P.P.Co. 4228 காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் 2 ;

12- 794

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம்

6 ஆம் பிரிவின் கீழான சான்றிதழ்

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர், விமல் வீரவங்ஸ ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின்படி இங்கே கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இந்தச் சட்டத்தின் 4 ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள எண்ணத்துக்கு அமைவாக வீடமைப்பு நோக்கத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசினால் சுவீகரிக்கப்பட வேண்டும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

விமல் வீரவங்ஸ,
நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
2013, நவெம்பர் 22.

### அட்டவணை

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் , மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 248 குருளு பொத்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, அவசானகம் காணி வரைபடம் 299 இல் மேலதிக இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள 528 ஆம் இலக்கத்தினை கொண்ட குருளுகெட்டியாஹேன என்ற காணித்துண்டு பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது. இதன் பரப்பளவு 1.018 ஹெக்டெயார்களாகும் :-

வடக்கு : 529 ஆம் இலக்க காணித்துண்டு ;
கிழக்கு : 338 ஆம் இலக்க காணித்துண்டு ;
தெற்கு : 71 மற்றும் 341 ஆம் இலக்கங்களைக் கொண்ட காணித்துண்டுகள் ;
மேற்கு : 529 ஆம் இலக்க காணித்துண்டு.

12-795

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.